செ.வெ.எண்: 587 நாள்: 12.10.2021

**புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதியில்**
**கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் மருத்துவ முகாமினை**

**மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி லயன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் இன்று (12.10.2021) துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் அவர்கள் பேசியதாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய பொதுமக்களுக்கு வீடுதேடிச் சென்று மருத்துவ சிகிச்சை வழங்கும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற மகத்தான திட்டத்தை செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டத்தின் முன்னோடி திட்டம் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த வருமுன் காப்போம் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு ஏற்படும் நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து, உயர் சிகிச்சை எடுத்துக்கொள்ளும் வாய்ப்பை உருவாக்கியது. இந்தியா போற்றும் வகையில் இத்திட்டம் அமைந்திருந்தது.

தமிழகம் மட்டுமல்லாமல், இந்திய துணைக் கண்டம் போற்றும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருவதுடன், வருமுன் காப்போம் திட்டத்தையும் தற்பொழுது செயல்படுத்தியுள்ளார்கள். ஏழை, எளிய மக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களை கண்டறிந்து, அதற்கான சிகிச்சை பெறுவது ஒரு வகை. நோய் வருவதற்கு முன்னரே ஆரம்பகட்டத்திலேயே நோயின் அறிகுறியை கண்டறிந்து, அதற்கான சிகிச்சை அளிப்பதன் மூலம் நோய் முழுவதுமாக குணமடையும் வாய்ப்பு உருவாகும். இதன்மூலம் மக்களின் உடல் நலனை பாதுகாக்கும் வகையில் வருமுன் காப்போம் திட்டத்தை தமிழகம் முழுவதும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் துவக்கி வைக்க அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 3 முகாம்கள் வீதம் 39 மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளது. இம்முகாமில் மருத்துவ வல்லுநர்கள் அடங்கிய சிறப்பு மருத்துவ குழுவினர் மூலம் பொதுமக்களுக்கு குழந்தை நலம், பல் மருத்துவம், கண், காது, மூக்கு, தொண்டை, இருதய நோய் சிகிச்சை, நீரிழிவு நோய் கண்டுபிடிப்பு, புற்றுநோய், காசநோய் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மருத்துவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளவுள்ளனர்.

மேலும் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் கலந்துகொண்டு தங்களுக்கு நோய் ஏதும் உள்ளதா என்பதை கண்டறிவதற்கான முழுஉடல் பரிசோதனையும் செய்துகொள்ளலாம். இவ்வாய்ப்பானது பொதுமக்களின் வீட்டு அருகிலேயே கிடைக்கப் பெறுவதால், இதனை பொதுமக்கள் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இத்திட்டம் ஏழை, எளிய பொதுமக்களுக்கு ஒரு வரபிரசாதமாக அமைந்துள்ளது.

தமிழக அரசு இம்மருத்துவ முகாமை ஏற்படுத்தி சிறந்த மருத்துவர்களை நியமித்து, எந்தெந்த நோய்களுக்கு முன் பரிசோதனை செய்ய வேண்டும் என்பதை அறிந்து, அவர்களுக்கான அனைத்து முன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் முன் பரிசோதனையின்போது கண்டறியப்படும் நோய் அறிகுறிக்கு சிகிச்சை அளித்து முழுமையாக குணமடைய செய்வதே வருமுன் காப்போம் திட்டத்தின் தலையாய பணியாகும். இந்த மருத்துவ முகாமினை அனைத்து பொதுமக்களும் உரிய முறையில் பயன்படுத்தி நோயற்ற வாழ்வினை வாழ வேண்டும் என மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.அர்ஜுன்குமார், வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்) மரு.இராமு, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.பூவதி, வீடுகட்டும் கூட்டுறவு சங்க இயக்குநர் அழகப்பன், வட்டார மருத்துவ அலுவலர் அருள்மணி நாகராஜன் மற்றும் ஊராட்சிமன்றத் தலைவர்கள் கீதா சோலையப்பன் (தொட்டியம்பட்டி), செல்வி முருகேசன் (கண்டியாநத்தம்), என்.முருகேசன் (மேலத்தானியம்), முத்துக்குமார் (செவலூர்) மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**